[979 மார்ச் 21]

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, சேலம் சங்ககிரி, சேலம் பென்சன் லைன், டவுன் டி.எஸ்.பி.பங்காளாவுக்கு அருகாமையில் உள்ள வீடுகள் பாழடைந்து இருப்பதால் ஒருவர் கூட அங்கே குடியிருக்கவில்லை. அப்படிப்பட்ட தகவலை ஏன் அரசுக்கு கொடுக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்த தற்காக நன்றி.

அரசு அதிகாரிகள் இடமாற்றம்.

* வினா எண். 501—திரு ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா: அரசு அதிகாரிகள் மாற்றுதல் செய்யப்பட்டுப் போகும் போது ஊழியர்கள் விருந்துவைக்கும் முறையை தடை செய்ய அரசு உத்தரவு போடப் படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தற்போது, அத்த கைய உத்தேசம் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, அரசு அதிகாரிகள் மாற்றுதல் ஆகி போகும்போதும், இன்னொரு அதிகாரி அந்த அலுவலகத்திற்கு வருகிறபோதும் அவர்களுக்கு விருந்துகள் வைக்க சில இடங்களில் கட்டாய வசூல் செய்யப்படுகிறது. அந்த அதிகாரிகளின் நல்லெண்ணத்தைப்பெற்று, அவர்களிடம் சலுகைகள் பெறவேண்டுமென்பதற்காக இப்படிச் செய்யப் படுவதாகச் சொல்லப்படுகிறது. இது மனம் உவந்து செய்யப் படுவதாகச் சொல்லலாம். பொதுவாக வரதட்சணை வாங்கு வதும் மனம் உவந்து அளிக்கப்படுவதுதான் என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க தற்போது சட்டம் கூட வந்திருக்கிறது. இதை மனதிற்கொண்டு, விருந்து வைக்கப்படுவதைத் தடுக்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இதுபற்றி அரசு விரிவாக ஆராய்ந்தது. ஒரு அதிகாரி மாற்றலாகி வெளியூருக்குப் போகும்போது, அங்கே பணி யாற்றுகின்ற ஊழியர்கள் தாங்களே மனம் உவந்து, முன்

[1979 மார்ச் 21

வந்து ஒரு பாராட்டு விழா நடத்துகிறார்கள் என்றால் அதிலே அரசாங்கம் தலையிட வேண்டியதில்லை. அதிகாரிகள் மாற்றலாகி வெளியூர்களுக்குப் போகும்போது, அதுவும் அரசாங்கத்தின் சார்பில் செல்கிறபோது பாராட்டு விழா நடத்துவதில் தவறு இல்லை. ஆனால் அவர்களுக்கு விலை உயர்ந்த பரிசுகள் தரக்கூடாது. கட்டாய வசூல் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அரசு அதிகாரிகள் மாற்றம் செய்யப்படும்போது, அவர்கள் வெளியூர்களுக்குப் போகும்போது சில ஊர்களில் அந்தத் துறையில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் பொதுமக்களிடம் பெருவாரியாக வசூல் செய்து லஞ்சம் என்ற முறையில் இல்லாவிட்டாலும் நன்கொடை என்ற பெயரால் மாற்றம் பெற்று செல்லும் அதிகாரிகளுக்குக் கொடுக்கிறார்கள். அண்மையில் மாயூரத்தில் அம்மாதிரியான சம்பவம் ஒன்று நடைபெற்றது. அது பற்றி அங்கே உள்ள திராவிட கழகத்தினர் அரசுக்கு புகார் கூட கொடுத்திருக்கிறார்கள். அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்படிப்பட்ட வசூல் முறைகளைத் தடைசெய்ய, அதிகாரிகளுக்கு பராட்டுவிழா என்ற பெயரில் இப்படிச் செய்வதை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இதுபற்றி தமிழ்நாடு அரசு பணியாளர் நன்னடத்தை விதி 4-ல் சில வரன்முறை இருக்கிறது. அதன்படிதான் இது அனுமதிக்கப்படுகிறது. எங்கேனும் கட்டாய வசூல் செய்கிறார்கள் என்றாலும், அதிக ஆடம்பரமாகச் செய்கிறார்கள் என்றாலும் அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, அரசு அதிகாரிகள் மாற்றப்படும்போது நடத்தப்படும் விருந்தில் அளிக்கக்கூடிய பரிசுப்பொருட்களை அந்த அலுவலகத்திலேயே வைத்துச் செல்ல அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்ன அந்த விதியின்படி அரசு ஊழியர்கள் பாராட்டுவிழா நடத்துகிறார்கள். சிறு அன்பளிப்பு வழங்குதல் பாராட்டுப் பத்திரம், வாழ்த்துப் பத்திரம், நற்சான்றிதழ்

1979 மார்ச் 21]

போன்றவைகள் அந்த அதிகாரிகளைப் பாராட்டும் வகையில் அல்லது மற்ற வகையில் வழங்குகின்ற விழாவில் அந்த அதிகாரிகள் கலந்துகொள்வதற்கு விதிமுறைகள் உண்டு. அதிக விலை மதிப்புள்ள பரிசுப்பொருட்கள் தரப்படுகின்றன; அது முறைகேடான வசூல் மூலம் வழங்கப்படுகிறது என்ற புகார் வருமானால் அது பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை. குறிப்பாக ஜனவரி முதல் தேதி அன்று ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு பெரிய அதிகாரிகளும் தங்களுக்கு கீழே பணியாற்றும் அத்தனை ஊழியர்களும் தங்களைச் சந்திக்க வேண்டும், சந்திக்கும்போது சாதாரணமாகச் சந்திக்கக்கூடாது. ஆள் உயர மாலை வேண்டும்; ஆப்பிள் மற்றும் பழவகைகள் வேண்டும், பரிசுப்பொருட்கள் வேண்டும் என்ற அளவுக்கு செயல்படுகிறார்கள். அதுமட்டுமல்ல. அவைகளோடு தங்கள் காலிலே விழுந்து வணங்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். இது வெள்ளைக்காரன் கொண்டுவந்த பழக்கம். ஜனவரி மாதம் முதல் நாள் கீழே உள்ள அலுவலர்கள் மேலதிகாரிகளைப் பார்க்க வேண்டுமென்பது. அந்த முறையைத் தடுக்க வேண்டும். அரசு அதற்கு ஏற்பாடு செய்யுமா?

[முற்பகல் 9.50.]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கேள்வி மாற்றுதல் செய்யப்பட்டு அதிகாரிகள் போகும்போது நடைபெறுகிற பாராட்டைப் பற்றி. ஆண்டு துவக்கத்திலேயோ அல்லது பொங்கல் நாளிலேயோ ஒரு அதிகாரியை இன்னொரு அதிகாரியோ அல்லது அதிகாரிகளோ அல்லது ஊழியர்களோ சந்திப்பது பண்பாட்டின் அடிப்படையில் நடைபெறுகிற காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, அதிகாரிகள் மாறிச் செல்லும்போது பாராட்டு கொடுப்பதைவிட புதிதாக ஒரு இடத்திற்கு பெரிய அதிகாரி வந்து சேருகின்றபோது அவருக்கு ஒரு விருந்து வைத்து அவரைச் சரிக்கட்டுகின்ற நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இதை அரசு அறியுமா? இதையாவது கட்டாயம் ரத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, போகிறவர்களை வாழ்த்தி அனுப்புவதும் வருகிறவர்களை வரவேற்று உபசரிப்பதும் அப்படி ஒன்றும் பாவமான காரியம் அல்ல.

[1979 மார்ச் 21

ஆனால் அதிலே ஏதாவது தவறான வசூல் போன்றவைகளை நடத்தி பரிசுப் பொருட்கள் அதிக விலையில் கொடுக்கப்படுகின்றதா என்பதைத்தான் சிந்திக்க வேண்டுமே தவிர, மற்றவைகள் எல்லாம் பண்பாட்டின் அடிப்படையிலே நடைபெறுவதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாப் பொருட்காட்சி மூலம் கிடைத்த வருவாய்.

*வினா எண். 502 —திரு. என். கிட்டப்பா, திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1978 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியின் மூலம் கிடைத்த வருவாய் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1978 ஆம் ஆண்டு நடைபெற்ற சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியின் மூலம் கிடைத்த வருவாய் ரூ. 18,34,000. இதில் செலவு போக, நிகர இலாபம் ரூ. 6,25,000.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை மாவட்ட தலைநகரங்களிலே நடத்துவதற்கு அரசு முன்வருமா ? அப்படி அரசுத் துறையில் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியை நடத்த இயலவில்லை என்றால் மாவட்ட தலைநகரங்களில் அவ்வாறு நடத்துவதற்கு நகராட்சிகளுக்காவது அனுமதி வழங்குமா? அப்படி அனுமதி வழங்கும்போது அதற்குத் தேவையான உதவித் தொகையினை வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, அரசு இது குறித்த தெளிவான முடிவுகளை அறிவித்திருக்கிறது. நகராட்சிகள் நடத்த விரும்பினால் நடத்தலாம். நகராட்சிகள் நடத்த விரும்பாத இடங்களில் மாவட்டத் தலைநகரங்களில் சுற்றுலாத் துறையோ அல்லது செய்தித் துறையோ நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையிலேயே கடந்த ஆண்டு மதுரையிலே சுற்றுலாத்துறை பொறுப்பேற்று பொருட்காட்சியை நடத்தியது. சேலத்திலே செய்தித்துறை பொறுப்பேற்று நடத்தியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது போன்று நகராட்சிகள் நடத்த முன்வருமேயானால் அதற்கு அரசு இயன்ற உதவிகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.